1973 ஆகஸ்ட் 4]

Travelling on foot-boards in buses.

* 23. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. Minister for Transport be pleased to state the steps taken by the Government to prevent the passengers travelling on foot-boards of the Transport buses in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை மாநகரில் பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளின் படிகளில் நின்று பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு பொது மக்களை வேண்டிக் கொள்ளும் பத்திரிகை அறிக்கையொன்று காவல் துறைக் கமிஷனராலும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மக்கள் தொடர்பு அதிகாரியாலும் வெளியிடப்பட்டது. பேருந்துகளின் படிகளில் நின்று பயணம் செய்வதினின்றும் பயணிகளைத் தடுக்குமாறு பயணித் துணைகளும் மேற்பார்வைப் பணியாளரும் கட்டளையிடப் பட்டுள்ளனர்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இவ்வாறு பயணம் செய்வதால் பல ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே பயணிகள் நெருக்கடியாக உள்ள இடங்களில், அதிகமாக உள்ள வழித் தடங்களிலே அதிகமாக பஸ்களை விட அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எங்கெங்கு பயணிகள் அதிகமாக ஏறிச் செல்கின்றார்களோ அங்கேயெல்லாம் அதிகமான பஸ்களை விடுவதைப்பற்றி பல்லவன் போக்குவரத்துக் கழகம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, கண்டக்டர்கள், டிரைவர்கள் ஆகியோருக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்பட்டபிறகு தான் பல நேரங்களிலே அதிகமான நெரிசல் ஏற்பட்டு பயணிகள் படிகளிலே நின்றுகொண்டு பயணம் செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது, அதனால் பயணம் செய்யும் நேரமும் அதிகரிக்கிறது. போக்குவரத்து கார்ப்பரேஷன் டைரக்டரும் இதனை ஒப்புக் கொண்டு பத்திரிகையிலே அறிக்கையும் விட்டிருக்கிறார். எனவே, அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வசூல் அடிப்படையிலே போனஸ் திட்டம் அமல்படுத்தப்பட்ட காரணத்தினுலேதான் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அதுவும் வேண்டுமானுல் ஒரு காரணமாக இருக்கலாம். மாநகரங்களிலே ஆபிஸ் நேரங்களிலே அதிகமாகப் பயணிகள் ஏறிச்செல்வது இங்கு மட்டுமல்ல, உலகத்திலே உள்ள பல பெரிய நகரங்களிலேகூட அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. சென்னை மாநகரத்திலே எங்கெங்கு பயணிகள் அதிகமாகச் செல் கிருர்களோ அந்த அந்த வழித்தடங்களிலே கூடுதல் பஸ் விடுவதன்மூலம் நெருக்கடியைக் குறைக்கலாம் என்பதைப்பற்றிய யோசனையை ஆராய்ந்து பார்க்கலாம்.

திரு. கோவை செழியன் : இந்த நாட்டிலே பெண்களே முன்னேறுங்கள் முன்னேறுங்கள் என்று சிலர் சொல்கிருர்கள். ஆனுல் அதைச் சட்டப்பூர்வமாக்கிய பெருமை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையே சாரும். பஸ் களிலே பெண்கள் முன்னுலே ஏறக்கூடிய நிலைமையைச் சட்டப் பூர்வமாக ஆக்கியிருக்கிருர்களே, அது வசதியாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெண்களுடைய வேண்டுகோளின்படிதான் அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பெண்கள் முன்னேற்றம் கண்டிருக்கிருர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : அதிகமாகக் கூட்டம் ஏற்பட்டு பஸ் களிலே நெரிசல் ஏற்படுவதற்கு டிரைவர், கண்டக்டர் பொறுப்பு அல்ல. ஆபீஸ் போயாக வேண்டுமென்ற நிலையில் நெரிசல் ஏற்பட்டு விடுகிறது, காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலும் அதிகமான பஸ்கள் விடவேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப் பினருடைய கருத்துத்தான் அரசாங்கத்தினுடைய கருத்தும் ஆகும்.